# அரச ஈட்டு முதலீட்டு வங்கி

SMIB

# வேலை வாய்ப்பு

வீட்டுவசதிக் கடன் நிதிச் சேவைகளில் முன்னணியில் திகழும் நிறுவனத்துடன் உங்கள் திறமைகளை முழுமையாக வெளிப்படுத்துங்கள்! நாட்டின் முதன்மையான வீட்டுவசதி வங்கியான அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB), வாடிக்கையாளர்களுக்கு இணையற்ற அனுபவங்களை வழங்குவதையும், நவீன நிதித் தீர்வுகளின் விரிவான அம்சங்களை அறிமுகப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, துணிச்சலான செயற்பாட்டு மாற்றத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இந்த வளர்ச்சியின் அடுத்த கட்டத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், தொலைநோக்குப் பார்வை கொண்ட, சுறுசுறுப்பான மற்றும் இலக்குகளை நோக்கிச் செயற்படும் தொழில்முறை நிபுணர்களை முக்கிய தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்குமாறு அழைக்கிறோம். தற்போதைய நடைமுறைகளுக்குச் சவால் விடுத்து, உயரிய வணிக இலக்குகளை அடைந்து, இலங்கையின் நிதித்துறையின் எதிர்காலத்தை வடிவமைக்கும் ஆற்றலும் அர்ப்பணிப்பும் உங்களிடம் இருந்தால், உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி முன்னேறுவதற்கான சிறந்த தளமாக SMIB திகழ்கிறது.

**பிரதம முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்)**

**முக்கிய பொறுப்புகள்**

கடன் இடர், சந்தைப்படுத்தல் இடர் மற்றும் செயற்பாட்டு இடர் தொடர்பான கொள்கைகளை மீளாய்வு செய்வதன் மூலம் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை நிறுவி, வங்கியில் இடர் முகாமைத்துவக் கலாசாரத்தை வளர்ப்பதற்கும், CBSL சுற்றறிக்கைகள், பணிப்புரைகள் மற்றும் உள்ளக தரநிலைகளுக்கு இணங்கிச் செயற்பட்டு வங்கியின் இலாபத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் வங்கியின் இடர் முகாமைத்துவச் செயற்பாடுகளுக்குத் தலைமைத்துவம் வழங்குதல். அத்துடன், இடர்களைக் குறைப்பதற்கான செயல் திட்டங்களைத் தயாரித்து அவற்றைக் கண்காணித்தல் மற்றும் BIRMC இற்கு இடர் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

**தகைமைகள்**

1. பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பொருளியல், புள்ளிவிபரவியல், வர்த்தகம், கணக்கு, வர்த்தக நிர்வாகம், முகாமைத்துவம், வங்கியியல், கணக்கியல் அல்லது சட்டத்தில் இளமாணிப் பட்டம் அத்துடன்

   ப.மா.ஆ. அங்கீகரித்த பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து முதுமாணிப் பட்டம் அல்லது இடர் தொழில்முறையாளர்களின் சர்வதேச சம்மேளனம் (GARP)/ தொழில்முறை இடர் முகாமையாளர்களின் சர்வதேச சம்மேளனம் (PRIMA) / CIMA-UK /ACCA-UK/CFA இன் இணை அங்கத்துவம்
2. ப.மா.ஆ. அங்கீகரித்த பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து முதுமாணிப் பட்டத்துடன் இடர் தொழில்முறையாளர்களின் சர்வதேச சம்மேளனம் (GARP)/ தொழில்முறை இடர் முகாமையாளர்களின் சர்வதேச சம்மேளனம் (PRIMA) / CIMA-UK /ACCA-UK/CFA இன் இணை அங்கத்துவம்
3. பதவிக்கு தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் முழு (சக) அங்கத்துவம்.

**அனுபவம் மற்றும் வெளிப்பாடு:**

முகாமைத்துவ திறனில் குறைந்தது பத்து (10) ஆண்டுகள் அனுபவம் அதில் ஐந்து (05) ஆண்டுகள் புகழ்பெற்ற வங்கி/ நிதி நிறுவனம்/ பாரிய அளவான கூட்டுத்தாபனம் ஒன்றில் சிரேஷ்ட நிலையில் இடர் முகாமைத்துவ துறையில் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

**சம்பள அளவு -** அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுடன் (10% கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவு மற்றும் வாடகை கொடுப்பனவு) சேர்த்து மாதம் ஒன்றுக்கு ரூபா 211,260 - 5,490 x 12 - 277,140/- . தோராயமான மாதம் ஒன்றின் மொத்த சம்பளம் ரூபா 355,000.00

**வயது -** 50 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் ஏற்கனவே அரச துறை வங்கி ஒன்றில் பணியாற்றுபவர்களுக்கு வயது வரம்பு பொருந்தாது)

**விண்ணப்ப இறுதித் திகதி - 2026.10..25**

**பொதுவான நிபந்தனைகள்**

**தேர்வு முறை** - வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறையின்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**நேர்முகப் பரீட்சை மூலமான தேர்வு**

**விண்ணப்பித்தல்**

ஆர்வமுடைய தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் கீழுள்ள மின்னஞ்சல் முகவரி வழியே உறவினர் அல்லாத இரு தொழில்முறை நடுவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு இலக்கங்களுடன் தமது கல்வி/ தொழில்முறை விபரங்களின் பிரதிகளை கொண்டதாக தமது சுயவிபரக் கோவையை அனுப்புதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பதாரர்களின் ரகசியம் கண்டிப்புடன் பேணப்படுவதோடு எந்த வகையான ஆதரவு திரட்டல்களும் தகுதி இழப்பாக கருதப்படும். தேர்வு, ஆட்சேர்ப்பை ஒத்திவைப்பது இரத்துச் செய்வது அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகள் மற்றும்/ அல்லது இந்த பெறுகையின் தேர்வு அளவுகோலை மாற்றும் உரிமை வங்கி வசமானது. பணிப்பாளர்கள் சபையின் முடிவு இறுதியானது மற்றும் முடிவானதாகும்.

**விண்ணப்பங்களை careers@smib.lk என்ற முகவரி ஊடாக மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.**